முதலானவற்றிற்கு ஜோதி முத்து போட்டுப் பார்த்து சுகமாக பரிகாரங்கள் கூறப்படுகிறது. நோயில் இருக்கும் ஆடு, மாடு போன்ற விலங்குகளுக்கும் மந்திரித்து அதாவது ஜோதி பார்த்து மருத்துவ முறைகள் தரப்படுகிறது. கிரகத்தினால் ஏற்பட்டால் பரிகாரமும், தமது மந்திரத்தால் தீர்க்க முடியாது என்றால் மருத்துவ மனைக்குத் தூக்கிச் செல்லும் வழி முறைகளும் சாமியாரால் கூறப்படுகிறது. பேய் பிடித்தவரிடம் இருந்து பேய் நீங்க தெய்வத்திற்கு சிதறு தேங்காய் உடைத்து சூடம் கொழுத்துவதனை பரிகாரமாக வைத்துள்ளனர்.

சமூகம் என்பது மனிதன் ஒருவரோடு ஒருவர் இணைந்து, குடும்பமாக ஒன்று கூடி வாழ்வதனைக் குறிப்பதாகும். காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து வந்த ஆதி (குடி) காலத்து மனிதன் ஆற்றங்கரை ஓரங்களில் குடிபெயர்ந்து வாழத் தொடங்கினான். இம்முறையே புதிய நாகரிக வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்தது. மனிதன் ஒவ்வொரு படிநிலைக்கும் தகுந்த மாதிரி தம்மையும், தாம் வாழும் சமுதாயத்தையும், சமூகத்தையும் மாற்றினான். ஒன்று கூடி வாழ்ந்த மனிதன் தங்களின் நலன் கருதி சடங்கு முறைகளினைப் பின்பற்றத் தொடங்கினான். கால மாற்றத்தில் சடங்கு முறைகள் முழுவதும் மாற்றம் பெறுவதில்லை. ஒரு சில சிறு மாற்றத்துடன் தொடர்ந்து வருகின்றது. இவ்வகை மாற்றங்களுடன் இருப்பதால்தான் இளைய சமுதாயமும் தற்காலத்தில் சடங்கு முறையினைப் பின்பற்றி வருகின்றது. ஒரு இனத்தின் நாட்டினர் மட்டுமோ, ஒரு சிறுவகுப்பினரோ அல்லது தனித்தனி ஆட்கள் மட்டிலுமோ எந்த ஒரு செயல்களையும் ஒழுங்காகச் செய்து வருவதனையே ‘வழக்கம்’ என்பர். இதனைப் பிற்காலத்தில் ‘சடங்கு’ என்றனர்.

சடங்குகள் ஒரே மாதிரியானவை அல்ல சமுதாயத்திற்குத் தகுந்தபடி மாற்றம் பெற்றுள்ளது. ஒரே சமூகமாக இருந்தாலும் ஒவ்வொரு கிராமத்திலும் வெவ்வேறு

சடங்கு முறைகளினைப் பின்பற்றி வருகின்றனர். இவை தனிமனிதன் சார்ந்ததாகவும் சமுதாயம் சார்ந்ததாகவும் உள்ளன. சடங்கு என்பது மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத, அவனது வாழ்வோடு கலந்த ஒன்றாக உள்ளது.

சிவகங்கை மாவட்டம் மஞ்சனி, ஆயினிப்பட்டியில் தமிழர்களின் மரபின்படி முரசு அதிர, பம்பை முழங்க சாமி கும்பிடுகின்றனர். இதன் பிறகே தொழுவத்தில் இருந்து காளைகள் அவிழ்த்து விடப்படுகிறது. வாடி வாசலின் வாயிலைச் சுற்றி நிற்கும் வீரர்கள் காளை வெளியே வந்ததும் அதனை அடக்க முயற்சி செய்கின்றனர். வாலைப் பிடித்து அடக்கினால் அது பெருமை இல்லை என்று எண்ணி கொம்பு, திமிலினைப் பிடித்து அடக்குகின்றனர். சங்க காலத்தில் அடக்கிய வீரர்களுக்குப் பெண் கொடுத்து வந்தனர். தற்காலத்தில் பெண்ணிற்கு மாற்றாக வீரர்களுக்குப் பரிசுப் பொருள்கள் கொடுத்து வருகின்றனர்.

அப்பூஜை மேற்கொள்ளப்படும் அறையில் குத்து விளக்கு ஏற்றி வைத்து, விபூதி, குங்குமம், வெற்றிலை, பாக்கு, களபம், சூடன், சாம்பிராணி, திரி முதலியன வைத்து அத்தோடு சுவரில் ஒரு கண்ணாடியும் சாய்த்து வைத்து அதில் ஒரு கிழவியின் உருவத்தை வரைந்து வைக்கிறார்கள். அங்கு வைக்கப்படும் கும்பத்திலும் அந்த உருவம் வரையப்படுகிறது. கும்பத்தின் மீது தேங்காய் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு வைக்கிறது.

நோன்பின் போது அந்நோன்பை நடத்தி வைக்கும் பெண்மணி கதை சொல்ல மற்றவர்கள் கையில் அவ்விலைகளை வைத்துக் கொண்டு அப்பெண்மணி சொல்லும் ஒவ்வொரு விஷயத்திற்கும் “கண்டேன் கண்டேன்” என்று சொல்ல வேண்டுமாம். இக்கதையானது இடத்திற்கு இடம் சிறிது வேறுபடுகிறது. அதே போல் கொழுக்கட்டை அவிக்கும் போதும் “கொழுக்கட்டை அவிஞ்சுடுச்சா” என்று கேட்கக்கூடாதாம். பதிலாக “விளைஞ்சுடுச்சா” என்று தான் கேட்க வேண்டுமாம்.

இம்மாவட்டத்தில் திருக்கோட்டியூர் என்னும் ஊர் சித்த மருத்துவத்திற்குப் புகழ் பெற்று விளங்குகிறது. புலியடிதம்பம், இடையமேலூர், சாக்கோட்டை, துளாவூர் மற்றும் குன்றக்குடி என்னும் ஊரில் எலும்பு முறிவுக்கும், மூட்டுப் பிசகிற்கும், இளம் பிள்ளை வாதத்திற்கும் பல்லாண்டு காலமாகச் சிறந்த முறையில் நாட்டு வைத்தியம் பார்க்கப்பட்டு வருகிறது. எண்ணெய் குழந்தை வைத்தியத்திற்கு கீழ்ச் சீவல்பட்டி என்னும் ஊர் சிறப்புற்றிருக்கிறது. மஞ்சள் காமாலை நோய்க்கு காரைக்குடி களனிவாசல் சிறப்பு பெற்றதாகும்.

மனிதப் பண்பாட்டினை ஆய்வு செய்கின்ற ஆய்வுகள் அனைத்தும் நரிக்குறவர் சமூகத்தினை கருத்தில் கொள்வதில்லை. அவர்களிடமும் பல்வேறு வகையான சங்க காலச் சடங்கு முறைகள் இருந்து வருகின்றன. எருமை மாட்டினைப் பலியிடுதல், திருமணத்தில் தாலி கட்டாமல் பாக்கு முதலியவையினைக் கொடுத்து திருமணம் முடித்தல் முதலியவை இதற்குச் சிறந்த சான்றாக அமைகிறது.

'போத்து இடம் பாஞ்சால் பேத்தடி வைக்காதே' என்ற வழக்கில் உள்ள முதுமொழியினைக் கூறி போகக் கூடாது என எச்சரிக்கின்றனர். போத்து என்னும் செம்பூகப் பறவை இடது பக்கம் சென்றால் வேறு எங்கும் போகக் கூடாது அது கெட்ட சகுனம் என்று சொல்லுகின்றனர். இச்சகுன நம்பிக்கை ஆண்களுக்கு மட்டுமே பார்த்து வருகின்றனர். பெண்களுக்குப் பார்ப்பது கிடையாது. ஒரு சில இடங்களில் ஆண், பெண் இருவருக்கும் பொதுவான ஒன்றாகவே காணப்படுகிறது. கள ஆய்வில் இவ்வகை வேறுபாடுகள் சிவகங்கை மாவட்ட மக்களிடம் இருந்து வருகின்றது என்பதனை அறிய முடிந்தது.

கூகை அலறினால் சாவு வரும் என்ற நம்பிக்கை பழங்காலத்தில் மட்டுமல்லாது இன்றைய காலத்திலும் தமிழகத்தில் இருந்து வருகிறது. இதனைப் புறநானூறு,

**"அஞ்சுவருரோ அல்குரலும் தூற்றலும்" (புறம். 280: 5)**

என்று விளக்கியுள்ளது. இதே செய்தியினை புறநானூறு மற்றொரு பாடலும் விளக்கியுள்ளது. இதனை,

**"அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்" (புறம். 41: 5)**

இப்பாடலின் வழி அறிய முடிகிறது. காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்பதும், நாய் அழுதால் இறப்புச் செய்தி வரும் என்பதும் சங்க காலம் முதல் தற்காலம் வரை இருந்து வரும் நம்பிக்கையாகும்.

மேலும் பல்லி ஒலி எழுப்புதல், கண் துடித்தல், கனவு காணுதல் பற்றிய நம்பிக்கைகளும் பழங்கால மக்களிடம் காணப்படுகின்றன. பல்லி ஒலி எழுப்புதலை நன்னிமித்தமாகக் கருதும் பழக்கம் சங்க காலத்தில் இருந்தது என்பதனை இலக்கிய வழி அறிய முடிகிறது. இவை இன்றும் சிவகங்கை மாவட்ட மக்களிடம் சில மாற்றங்களுடன் இருந்து வருகிறது.

மனித வாழ்க்கையில் எந்த ஒரு நிகழ்வை எடுத்தாலும் அதில் நம்பிக்கை சார்ந்த சில நடைமுறைக் கூறுகளை வைத்துள்ளனர். அது இயற்கையாய் நிகழ்வதாக இருந்தாலும் சில சடங்கு சம்பிரதாயங்கள் பார்க்கின்றதனை மக்கள் தாம் வாழும் பண்பாட்டில் வைத்துள்ளனர். கருடன் என்னும் பறவை இடது பக்கம் சென்றால் நல்லது, காகம் வலது பக்கம் சென்றால் நல்லது என்கின்றனர். காகத்தினை சனீஸ்வரன் என்று அழைத்து வருகின்றனர். இயற்கையாக நிகழக் கூடியதனையும் நம்பிக்கை சார்ந்த ஒன்றாக மக்கள் தங்களது பண்பாட்டுடன் வைத்துள்ளனர்.

தாங்கள் வாழும் இடங்களில் உள்ள உயிரினங்கள் எழுப்பும் ஒலியினை வைத்து மக்கள் நன்மை தீமையினை அறிந்து வருகின்றனர். பல்லி முதலான உயிரினங்கள் தங்களுக்கு நிகழ இருக்கும் செய்தியினை முன்பே கூறக் கூடியது என மனிதன் நம்பினான். வீட்டில் தான் குறித்து வைத்திருக்கும் திசையில் கத்தினால் அவை நல்லவை என்று கருதினான். வேறு திசையில் ஒலி எழுப்பினால் தீயவை என்றும் நம்பி வந்தான். எந்தத் திசையில் ஒலி எழுப்புகிறது என்பதனைக் கணித்துக் கொண்டு அதற்குத்தக தமது செயல்களைச் செய்து வர தயார்படுத்திக் கொண்டான். இவ்வழக்க முறை பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகின்ற பண்பாட்டுக் கூறாகும்.

சில இயற்கை நிகழ்வுகளில் தங்களது நம்பிக்கையினை வைத்து உள்ளனர். கிழக்குத் திசையில் பல்லி கத்தினால் நல்லவை நடக்கும் என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். பல்லி ஒலி எழுப்புதல் என்பது இயல்பான ஒன்றாக இருந்தாலும் தங்களது நம்பிக்கையினை இதில் வைத்து இருக்கின்றனர். இது சமூகத்திற்குச் சமூகமும், கிராமத்திற்குக் கிராமமும் வேறுபடுவதனை மக்களிடம் கேட்ட நேர்காணல் மூலம் அறிய முடிகிறது.

பண்பாடு என்பது மனிதனின் அனைத்து விதமான புழங்கு பொருள்களையும், சடங்கு முறைகளையும் எடுத்துக் கூறுவதாகும். மனிதனின் ஒவ்வொரு செயலையும் ஒன்றுவிடாமல் மக்களுக்குத் தெரியப்படுத்துவதே பண்பாடாகும். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அவன் பயன்படுத்தும் அனைத்தும் பண்பாட்டுக் கூறுகளினை உள்ளடக்கியதாகும். அவை ஒவ்வொன்றையும் விளக்குவதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு சமூகத்தின் சடங்கு முறைகளும் தரப்பட்டுள்ளன.

இப் பேராய்வுத் திட்டத்தின் கீழ் கள ஆய்வுப் பணியில் இருக்கின்ற பொழுது பெறப்பட்ட மகப்பேறு அடையும் மருத்துவம், அம்மை நோய் ஏற்பட்டு இருப்பின் கடைப்பிடிக்கும் முறைகள், மஞ்சள் காமாலை நீக்கும் மருத்துவம் குறித்த விலையில்லாத பூரண குணமாகும் இயற்கை மருத்துவ இடங்கள் பரவலாக்கம் பெற்றுள்ளன. குறிப்பாகப் பெண்கள் பருவம் அடைகின்ற பூப்புனிதச் சடங்குமுறைகள், பேறுகாலச் சடங்குமுறைகள் கள ஆய்வுத் தகவல் பரவலாக்கத்தின் அடிப்படையில் சிவகங்கை மாவட்ட மக்கள் பெரும்பான்மையோர் சடங்கியல் நோக்கம் அறிந்து கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர். சடங்குகளைத் தொடர்பு படுத்தி எழுதப்பட்ட படைப்புக்கள் மற்றும் பொது நிகழ்வு விளக்க உரைகள் மாவட்ட மக்களிடம் வரவேற்பினைப் பெற்றது. இதன் காரணமாக மலேசிய புலம்பெயர் மக்களின் வேண்டுகோளினை ஏற்று மலேசியத் தினசரி நாளிதழான "தமிழ் மலர்" பத்திரிக்கையில் "மானுடம் மீட்டெடுக்கும் சடங்குகள்" என்னும் தலைப்பில் தொடர் கட்டுரை வெளிவந்தது. சடங்குகள் தொடர்பான ஐயங்களுக்குத் தொடர்பு கொள்கின்றனர்.

## Summary of the Findings:

### ஆய்வின் சாராம்சம்

சமூகம் என்பது மனிதன் ஒருவரோடு ஒருவர் இணைந்து, குடும்பமாக ஒன்று கூடி வாழ்வதனைக் குறிப்பதாகும். காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்து வந்த ஆதி (குடி) காலத்து மனிதன் ஆற்றங்கரை ஓரங்களில் குடிபெயர்ந்து வாழத் தொடங்கினான். இம்முறையே புதிய நாகரிக வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்தது. மனிதன் ஒவ்வொரு படிநிலைக்கும் தகுந்த மாதிரி தம்மையும், தாம் வாழும் சமுதாயத்தையும், சமூகத்தையும் மாற்றினான். ஒன்று கூடி வாழ்ந்த மனிதன் தங்களின் நலன் கருதி சடங்கு முறைகளினைப் பின்பற்றத் தொடங்கினான். கால

மாற்றத்தில் சடங்கு முறைகள் முழுவதும் மாற்றம் பெறுவதில்லை. ஒரு சில சிறு மாற்றத்துடன் தொடர்ந்து வருகின்றது. இவ்வகை மாற்றங்களுடன் இருப்பதால்தான் இளைய சமுதாயமும் தற்காலத்தில் சடங்கு முறையினைப் பின்பற்றி வருகின்றது. ஒரு இனத்தின் நாட்டினர் மட்டுமோ, ஒரு சிறு வகுப்பினரோ அல்லது தனித்தனி ஆட்கள் மட்டிலுமோ எந்த ஒரு செயல்களையும் ஒழுங்காகச் செய்து வருவதனையே 'வழக்கம்' என்பர். இதனைப் பிற்காலத்தில் 'சடங்கு' என்றனர். சடங்குகள் ஒரே மாதிரியானவை அல்ல சமுதாயத்திற்குத் தகுந்தபடி மாற்றம் பெற்றுள்ளது. ஒரே சமூகமாக இருந்தாலும் ஒவ்வொரு கிராமத்திலும் வெவ்வேறு சடங்கு முறைகளினைப் பின்பற்றி வருகின்றனர். இவை தனிமனிதன் சார்ந்ததாகவும் சமுதாயம் சார்ந்ததாகவும் உள்ளன. சடங்கு என்பது மனித வாழ்க்கையில் பிரிக்க முடியாத, அவனது வாழ்வோடு கலந்த ஒன்றாக உள்ளது.

வீட்டில் நடக்கும் நல்லவை, தீயவை இரண்டிற்கும் உரிய நேரம் பார்த்து முறைப்படி தகுந்த சடங்குகள் செய்தே நிறைவு செய்கின்றனர். சடங்கு என்பது இன்று தோன்றியவை அல்ல. மனிதன் தோன்றிய நாளில் இருந்தே தொடர்கிறது. இனக் குழுவாய் வாழ்ந்த மனிதன் தமக்கு நிகழும் ஒருசில அமங்கலச் செயல்கள் ஏதோ ஒரு குறைபாட்டால் வருகிறது என்று எண்ணினான். இக்குறைபாடுகளில் இருந்து தம்மைக் காத்துக்கொள்ள சில சடங்கு முறைகளினைச் செய்தான். இதுவே பிற்கால வளர்ச்சியாலும் பல்வேறு சமூகத்தினர் அல்லது இனக் குழுவினருடன் ஏற்பட்ட தொடர்பாலும் மந்திரங்களாக அறிமுகமாயின. இத்தொழிலைச் செய்வதற்கு என்று தனி ஆட்களும் இருந்து வருகின்றனர். திருமணம், வீடு கட்டுதல், வீடு குடியேறுதல் முதலான நல்ல காரியங்கள் தொடங்கும் முன்பும் சில சடங்குகள் செய்கின்றனர். இவ்வகைச் சடங்குகள் செய்தால் தாம் தொடங்கும்

காரியத்திற்கு நல்லது என்று நம்பினான். தீமைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவும், நன்மையாய் முடிய வேண்டியும் முன்னேற்பாடாகச் செய்தான். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அவனது வாழ்வு முழுவதும் சடங்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவில் கும்பிடுவதாக இருந்தாலும், திருவிழா கொண்டாடுதல் என அனைத்து நிகழ்வுகளுக்கும் மனிதன் சடங்குகள் செய்தே பழக்கப்பட்டுள்ளான். இந்த முறைகள் ஒவ்வொன்றும் ஆதி குடி மனிதனிடம் இருந்து வந்தவையாகும். நாகரிகம் அடைந்த இன்றைய மனிதனிடமும் நாகரிகமற்ற பழங்குடி மக்களிடமும் சடங்குகள் காணப்படுகின்றன. சடங்கு என்பது மனித வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் கட்டுப்பாட்டுடன் கூடிய செயல் முறையினை அடிப்படையாகக் கொண்ட இறுக்கமான விதிகளை உள்ளடக்கியதாகும். ஆதி குடி மனிதன் ஏற்படுத்திய சடங்கு முறைகள் இன்றைய காலத்திலும் சில மாற்றத்துடன் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இச்சடங்கு முறைகள் இன்றைய காலத்தில் தோன்றியவை கிடையாது. சங்க காலம் தொட்டே தொடர்ந்து வருகின்றது. சங்க இலக்கியத்தில் பேயோட்டுச் சடங்கு, குறி கேட்கும் சடங்கு, நடுகள் வழிபாட்டு முறைகள், இறப்பின் போது நடத்தும் சடங்குகள் முதலானவை சிவகங்கை மாவட்ட மக்களிடம் இன்றைய காலத்திலும் ஒரு சில மாற்றத்துடன் இருந்து வருகின்றது என்பதனை ‘சிவகங்கை மாவட்ட மக்களின் பண்பாட்டு பாரம்பரியச் சடங்கு முறைமைகளில் சங்க காலத்து எச்சம் - ஒரு தேடல்’ எனும் ஆய்வின் வழி காண முடிகிறது. இவ்வாய்வு ‘பல்கலைக்கழக மானியக் குழு’ (UGC) ன் உதவியுடன் மேற்கொள்ளப்பெற்றிருக்கிறது.

**பேராய்வுத் திட்டத்தின் தலைப்பு: "சிவகங்கை மாவட்ட மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியச் சடங்கு முறைமைகளில் சங்க காலத்து எச்சம் - ஒரு தேடல்" என்பது இப்பேராய்வுத் திட்டத்திற்கான தலைப்பாக அமைந்துள்ளது.**

**ஆய்வுப் பொருள்:**

மனிதன் பல்வேறு வளர்ச்சிப் படி நிலைகளைக் கடந்து வந்தாலும் அவன் சார்ந்த சமூகத்தினுடைய வாழ்க்கை முறைகளும், பண்பாடுகளும் அவன் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்று விளங்குகின்றன. சமூகத்திற்கு அடித்தளமாக அமைந்த ஒவ்வொரு மனிதனும் தனது படைப்பாக்க முயற்சியில் ஈடுபடும்போது சமூகம் சார்ந்த கலைகள், வாழ்வியல் நிகழ்வுகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் முன்னிருத்தியே இலக்கியங்களைப் படைத்திருக்கிறான். இலக்கியங்கள் எழுந்த காலகட்டத்துச் சமூகம் சார்ந்த நடப்பியல் உண்மைகளைப் புனைவுகளோடு வெளிப்படுத்துகின்றன. ஆதிச் சமூக மக்களின் வாழ்வியல் கூறுகள் (பண்பாட்டுச் சடங்குகள்) பழங்குடி மக்களிடம் இன்னும் எச்சமாகவே காணப்படுவதைப் போன்று சிவகங்கை மாவட்ட மக்களிடமும் காணப்படுகிறது என்பதனை ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு அணுகுமுறைகள்:**

சடங்குகள் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாகும் வாழ்க்கை நெறி முறைகளையும் தற்கால மக்களின் வாழ்க்கை நெறி முறைகளையும் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள சடங்குகளையும் மானிடவியல் நோக்கில் ஆராய்வதால் மானிடவியல் அணுகுமுறையும், சங்க இலக்கிய பாடல்களை, கள ஆய்வில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில் பகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளதால் பகுப்பாய்வு அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளது. சங்க காலத் தமிழர்களின் வாழ்வியலையும் சிவகங்கை

மாவட்ட மக்களின் வாழ்க்கை முறையினையும் ஒப்பிட்டு ஆய்வதால் ஒப்பாய்வும் பின்பற்றப்பட்டுள்ளன.

**முதன்மைத் தரவுகள்:**

சங்கத் தமிழர் இனக்குழு வாழ்க்கையைப் பின்பற்றியே தங்கள் வாழ்க்கையை வாழ்ந்திருந்தனர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கைப் பின்னணியில் அவர்களின் அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்வுகளைப் பதிவு செய்யும் ஆவணமாகவே பழந்தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், அகராதிகள், ஆவணங்கள், கள ஆய்வில் கிடைத்த சடங்குகள் சார்ந்த பதிவுகள் அனைத்தும் முதன்மைத் தரவுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**துணைமைத் தரவுகள்:**

இவ்வாய்வுக்கான துணைமைத் தரவுகளாக சிவகங்கை மாவட்டம் பற்றி வந்துள்ள நூல்கள், நாட்டார் பாடல்கள், நாட்டார் வழக்கில் வந்துள்ள பாடல் தொகுப்பு, மானிடவியல் நோக்கில் வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், நாளிதழில் வந்துள்ள பதிவுகள் அனைத்தும் துணைமைத் தரவுகளாக அமைந்துள்ளன.

**ஆய்வுக்களமும் ஆய்வுப்பணி செய்த விபரமும்:**

சிவகங்கை மாவட்டம் நகர்ப்புறம், கிராமப்புறம் என இருபெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு, முதல் வருடம் முழுவதும் கிராமப்புறம் சாந்த வட்டங்கள் மட்டும் முதல் சுற்றுக்கெனத் தேர்வு செய்யப்பெற்று, கள ஆய்வினை நிகழ்த்தி சடங்கு முறைகள், புகைப்படம் எடுத்தல், காணொளி காட்சியினைப் பதிவு செய்தல் (video), வாழ்வியல் கூறுகள் ஆகியவை தரவுகளாகச் சேகரிக்கப்பட்டன. கிராமத்தில் இல்லாமல் சாலைகளின் ஓரங்களில் மரத்தின் அடியில் உள்ள சிறிய

**கோவில்கள், மரத்தினையே கோவிலாக வைத்து** வணங்கும் இயற்கை சார்ந்த முறைகள் ஆகிய அனைத்தினையும் புகைப்படம் எடுத்து சேகரித்து பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. இத்தரவுகள் சங்க இலக்கியத்துடன் தொடர்புடையதாக இருந்ததால் தொகுக்கப்பட்டன.

இரண்டாவது கள ஆய்வுச் சுற்றில் படித்த மக்களிடம் பேட்டிகள் காணப்பட்டன. **திருவிழாவில் நடத்தப்படும் சடங்கு முறைகள்** குறித்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.

மூன்றாவதாக நடைபெற்ற கள ஆய்வில் **ஏறு தழுவுதலில் நடைபெறும் சடங்குகள், திருமணச் சடங்குகள்** குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

நான்காவதாக நடைபெற்ற கள ஆய்வில் **நாட்டுப்புற மருத்துவ முறைகள், உழவுத் தொழில் சார்ந்த** தகவல்கள் புகைப்படம் மற்றும் காணொளிக் காட்சியாகச் சேகரிக்கப்பட்டன.

**ஆய்வு முடிவுகள்**

சங்க இலக்கியத்தில் உள்ள சடங்கு முறைகள் சிவகங்கை மாவட்ட மக்களிடம் இன்றும் இருந்து வருகின்றன. சங்க கால மக்களிடம் இருந்த சடங்குகளின் வழக்கம் தற்காலத்தில் சிறிய வேறுபாட்டுடன் இன்றும் இருக்கின்றது. காலங்கள் பல மாற்றம் பெற்று இருப்பது போல சடங்குகளும் சிறு சிறு மாற்றங்களுடன் சிவகங்கை மக்களிடம் இருந்து வருவதனைக் கள ஆய்வின் வழி அறிய முடிகிறது. ஒரு சில சடங்குகளில் மாற்றம் இருந்தாலும் அதன் உட் கூறுகள் அல்லது படையல் பொருள்கள் வழி பண்டைக் காலத்தில் இருந்த சடங்கின் வகைகளில் ஒன்று என்பதனை அறிய முடிகிறது. கள ஆய்வில் கிடைத்த தகவலின் அடிப்படையில் சங்க இலக்கியங்களை ஒப்பீடு செய்யப்பட்டது. இதனை அடிப்படையாக வைத்து ஆய்வில் கிடைத்த முடிவினை முடிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பண்டைத் தமிழன் பழமையான பண்பாட்டினையும், சிந்தனை மரபினையும் கொண்டிருந்தான் என்பதற்கு சிவகங்கை மாவட்டத்தில் நடந்த ‘கீழடி’ அகழாய்வு ஒரு சிறந்த சான்றாகும். இப்பழமையான வரலாற்றினைக்

கொண்டிருந்த தமிழன் அதனை அப்படியே விட்டு விடாமல் பல்வேறு கால மாற்றத்திற்குப் பின்பும் பின்பற்றி வருகிறான். மனிதன் பல்வேறு பழமையான வாழ்வியல் கூறுகளை வைத்து இருந்தாலும், மனிதன் மேற்கொள்ளும் சடங்கு என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இச்சடங்கு முறைகளினை சிவகங்கை மாவட்ட மக்கள் இன்றளவும் தமது வாழ்வியலோடும், பழக்க வழக்கத்தோடும் வைத்திருக்கின்றனர். என்பது இந்த ஆய்வின் வழி அறியப்பட்டுள்ளது. சிவகங்கை டம் மக்கள் தொகை 13,39,101 ஆகும். ஆண் பெண் பாலின விகிதமானது 1,000 ஆண்களுக்கு 1,003 பெண்கள் வீதமாக அமைந்துள்ளது. சிவகங்கை மாவட்டம் 3 நகராட்சிகளையும், 8 வட்டங்களை தற்போது கொண்டுள்ளது. 12 ஊராட்சிகளை உள்ளடக்கியது. பஞ்சாயத்துக்கள் 486, வருவாய்க் கிராமங்கள் 463, பிர்க்காக்கள்36, பேரூராட்சிகள் 12 கொண்டுள்ளது. இவற்றை உள்ளடக்கியதே சிவகங்கை மாவட்டமாகும்.

## Contribution to the Society:

## இந்தப் பேராய்வுத் திட்டமானது சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள பங்களிப்பின் விவரம்:

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நாட்டுப்புறத் தெய்வங்கள் நின்ற படியோ, அமர்ந்த படியோ அல்லது கல்லில் படம் வரைந்து இருக்கின்றன. இத்தெய்வங்களின் உருவம் மரம், இரும்பு, கல் முதலியவற்றால் வடிவமைக்கப்பட்டுள்ளன. வேப்ப மரம், அரச மரம் முதலியவற்றில் மஞ்சள் தடவி பட்டுத் துணி கட்டி வழிபட்டு வருகின்றனர். மரத்திற்கு அடியில் சூலம் வைத்தும் வழிபாடு செய்து வருகின்றனர். செங்கல், சுவர் முதலானவற்றில் மஞ்சளால் சூலம் வரைந்தும் இம்மாவட்ட மக்கள் வழிபடுகின்றனர். மேலே கூறியது போன்று சில இடங்களில் ஏதேனும் ஒரு பொருளால் உருவம் அமைத்து இருக்கின்றனர்.

ஏதோ ஒரு காரணத்திற்காக ஒரு கிராமத்தில் இருந்து வேறு கிராமத்திற்குச் செல்லுகின்ற மக்கள் தாங்கள் வழிபட்ட தெய்வத்தினை தாம் செல்லும் இடத்திலும் வைத்து வணங்க வேண்டும் என்பதற்காக அக்கோவிலின் முன் உள்ள மண்ணை வெள்ளைத் துணியில் கட்டி வந்து வெள்ளி, செவ்வாய் அல்லது ஏதேனும் நல்ல நாளில் வணங்கி வருகின்றனர். மரம், சூலத்தில் உள்ள தெய்வங்கள் பெரும்பாலும் பெண் தெய்வமாகவே இருக்கின்றன. இம்மாவட்டத்தில் உள்ள பெண் தெய்வம் கையில் சூலம், ஆண் தெய்வம் அருவாள் முதலான பொருள்களை வைத்திருக்கின்றன. அமர்ந்தகோல அம்மனின் வலது காலின் கீழ் சிங்கம், நாகம், வேதாளம் போன்றவற்றில் ஒன்று காட்டப்பட்டிருக்கும். நாக வடிவ உருவமே பெருமளவில் உள்ளது. அரைக்கோளத் தலை வடிவம் கல், சுதை, சிமெண்ட், மண் போன்றவற்றில் ஒன்றினால் செய்யப்பட்டிருக்கும், வெட்டவெளியில் அல்லது ஆலமரம், புளிய மரத்தின் கீழ் அமைந்த சுடலை மாடன் தெய்வம் என்கின்றனர். தலையில் கண், மீசை வரையப்பட்டோ வெள்ளியிலானா கண் மீசை பொருத்தப்பட்டோ இருக்கும். உடல் பகுதியில் வெட்டுக்கத்தி அல்லது குண்டாந்தடியின் பெரிய உருவம் வரையப்பட்டிருக்கும். வலது கையில் உள்ள ஆயுதம் மேலே தூக்கிப்பிடித்தும் இடதுகை ஆயுதம் தரையில் ஊன்றியும் அமைக்கப்படும்.

ஒரு சில கிராம தெய்வங்களுக்கு பூசாரி என்பவர் நியமனம் செய்து கோவிலை பராமரித்து வருகின்றனர். கிராமத்தில் இருக்கக் கூடிய பெரும்பாலான கோவில்களில் பூசாரிகள் கிடையாது மக்களே வழிபட்டுச் செல்கின்றனர். தங்களது முன்னோர் வழிபாட்டு முறை அடர்ந்த காட்டிலோ அல்லது வயல் வெளியிலோ அமைந்திருக்கிறது. ஒவ்வொரு தெய்வமும் அது எப்படி வந்தது என்ற வரலாற்றுக் கதை ஒன்றும் வைத்திருக்கின்றனர்.

முனியப்ப சாமி அல்லது முனியைய்யா என்று கூறப்படும் தெய்வத்திற்கு சூலாயுதம் மட்டுமே நட்டு வைத்து வணங்குகின்றனர். கையில் அரிவாளுடன் இருந்தால் அது கருப்பர் தெய்வமாகக் கூறுகின்றனர். அம்மன் கோவில்கள் அனைத்திலும் சூலாயுதம் நடப்பட்டுள்ளது பட்டுத் துணி சுற்றப்பட்டு இருக்கின்றது. ஒரு சில இடங்களில் சிலை செய்து வைத்துள்ளனர். அம்மன் வடிவம் ஒரே மாதிரியாக இருக்கின்றன, பெயர்தான் வேறுபட்டுள்ளது. இதே போன்று வேப்ப மரத்தில் மஞ்சள் பூசி அதில் பட்டுத்துணி கட்டி வைத்து அதனை அம்மனாக நினைத்து வழிபடுகின்றனர். கிராமத்தில் யாருக்காவது பேய் பிடித்து இருந்தால் பூசாரி அல்லது அக்கிராமத்தில் இருக்கும் சாமியாரிடம் வேப்பிலையால் மந்திரித்து திருநீறு வாங்கி நெற்றியில் பூசிக் கொள்கின்றனர். இம்முறை சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கிராம மக்கள் அனைவரிடமும் இருந்து வருகின்றன. இதே போன்று பயந்து இருந்தால் பூசாரியானவர் மந்திரித்த தாயத்தினைக் கட்டி விடுகிறார். இதனைச் செய்தால் பேய், பிசாசு அருகில் வந்து அண்டாது என மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். ஒரு சில கிராமத்தில் உடுக்கை அடிக்கும் நபரிடம் சென்று இதனைக் கேட்டு வருகின்றனர். குறி கூறுபவர்கள் தான் வேறுபடுகின்றனரே தவிர சடங்குகள் சிறு மாற்றத்துடன் ஒரே மாதிரியாகவே இருந்து வருகின்றன. இது போன்ற நம்பிக்கைகள் சிவகங்கை மாவட்ட மக்கள் அனைவரிடமும் இருந்து வருகிறது.

நரிக்குறவர்களின் திருவிழாச் சடங்குகள் பிற மக்களிடம் இருக்கும் சடங்கு முறைகளில் இருந்து முழுவதும் வேறு பட்டுள்ளதனை அறிய முடிகிறது. பலியிடும் வழக்கம், தெய்வத்தை வணங்கும் பழக்கம் அனைத்திலும் வேறு பாடுகள் காணப்படுகின்றன. பிற சமூகத்தினரின் திருவிழா கொண்டாடும் வழக்கம் என்பது சிறிய வேறுபாடுகள் உள்ளடங்கியதாக இருந்து வருகின்றன. நரிக்குறவர் சமூக மக்களின் திருவிழா இவற்றில் இருந்து வேறுபட்டதாகும்.

திருமண நிகழ்விலும் சடங்கு நிகழ்த்துவதில் மாற்றங்கள் இருந்து வருகின்றன. திருவிழா போன்றே கிராமம் மற்றும் சமுதாயத்திற்கு ஏற்ப சடங்குகளில் மாற்றம் இருப்பதனை அறிய முடிகிறது. கோவிலில் திருமணம் நடைபெறும் பொழுது ஒருவகையான சடங்கும், மணமகள் இல்லத்தில் நிகழும் பொழுது வேறு வகையான சடங்கு முறைகளும் பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக நரிக்குறவர் சமூகத்தினர் முதல் மனைவியினைத் தீர்ந்த பின்பு இரண்டாம் திருமணம் செய்கின்ற பொழுது சில சடங்கு முறைகளினைச் செய்து வருகின்றதனை அறிய முடிகிறது. இது பிற சமூக மக்களிடம் காணப்படாத ஒன்றாகும். பிற சமூக மக்களிடம் இருக்கும் திருமணச் சடங்கு முறை என்பது சிறிய வேறுபாட்டுடன் இருந்தாலும் நரிக்குறவர் சடங்கு என்பது முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும்.

ஏறு தழுவுதல் எனப்படும் மாடு பிடித்தல் சங்க காலம் தொட்டு இன்று வரை சிவகங்கை மாவட்டத்தில் இருந்து வருகிறது. அனைத்துக் கிராமத்திலும் ஒரே மாதிரியாகவே நடத்தப்படுகின்றன. எந்தவிதமான வேறுபாடும் இதில் இல்லை. விரட்டு மஞ்சு விரட்டு, வட மஞ்சு விரட்டு, வாடி மஞ்சு விரட்டு எனப் பிரிவுகள் உள்ளன. காளையினை ஒருவர்தான் பிடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதனை நடத்தி வருகின்றனர். கிராமங்கள் அனைத்திலும் இதே நிலைதான் தொடர்கின்றது. காளையினைத் தழுவுகின்ற வீரனுக்கு பரிசுப் பொருள்கள் கொடுத்து சிறப்புச் செய்கின்றனர்.

கிராம திருவிழா நேரங்களில் செய்கின்ற சடங்கு மற்றும் ஒருங்கிணைப்பு நிகழ்வுகள் கிராமத்திற்கு ஏற்ப மாற்றம் பெற்று இருப்பதனைக் காண முடிகிறது. தெய்வங்களுக்கு ஏற்பவும் சடங்கு முறைகளில் மாற்றம் இருந்து வருகின்றன. ஆண் தெய்வமாக இருந்தால் ஒரு விதமான சடங்கும், பெண் தெய்வமாக இருந்தால்

அதற்கென இருக்கும் சடங்கினையும் பின்பற்றி வருகின்றனர். சைவம் சார்ந்த தெய்வமாக இருந்தால் அதற்கெனத் தனியாக சடங்கு முறைகளினை வைத்துள்ளனர். கடவுளை வணங்குவதாக இருந்தாலும் வழிபாட்டிலும் வேறுபாடுகள் இருந்து வருவதனைத் திருவிழா நாட்களில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் காண முடிகிறது. திருப்பத்தூர் வட்டம் நெற்குப்பை முதலான பகுதிகளில் இராவாத்தா எனும் பெயரில் இயற்கையினை வழிபட்டு வருகின்றனர். இத்திருவிழா சங்க காலம் போன்று முழு நிலவினை மையமாக வைத்தே வழிபடுவதாகும். உருவ வழிபாடு எதுவும் கிடையாது. இவ்வழக்கம் நெற்குப்பை பேரூராட்சிப் பகுதியில் மட்டும் உள்ளது பிற பகுதிகளில் இம்முறை இல்லை.

ஆடி, தை மாதங்களில் பெண்கள் நோன்பு இருந்து வருகின்றனர். ஆண்கள் தங்களது முன்னோரினை நினைத்து ஆடி மாதம் அமாவசை நாள் மற்றும் வேள்ளிக் கிழமைகளில் விரதம் இருப்பதனை வழக்கமாக வைத்துள்ளனர். நிலாவினைக் காண்பித்து குழந்தைக்குச் சோறு ஊட்டும் முறை ஆகியன இருந்து வருவதனை கள ஆய்வின் வழி அறிய முடிகிறது. சங்க கால மனிதன் தமது பண்பாட்டில் எதை எல்லாம் வைத்து இருந்தாலும் அவை அனைத்தினையும் சிறு வேறுபாட்டுடன் தற்கால மனிதன் பின்பற்றுகிறான். குறிப்பாக சிவகங்கை மாவட்ட மக்கள் அவ்வகைப் பண்பாட்டியல் சடங்குகளை தங்களது பழக்க வழக்கத்தில் வைத்துள்ளனர் என்பதனைக் கள ஆய்வின் வழி அறிய முடிகிறது.

இறப்பு நிகழ்வின் பொழுது செய்கின்ற சடங்குகள் கிராமம், சமூகத்திற்கு ஏற்ப மாற்றம் பெற்று இருப்பதனைக் காண முடிகிறது. ஒரே சமூகத்தினராக இருந்தாலும் ஒவ்வொரு கிராமத்திலும் சடங்கு முறைகள் வேறுபடுகின்றன. எல்லோருக்கும் ஒரே மாதிரியான சடங்குகளைப் பின்பற்றுவதில்லை. ஆண், பெண் இறந்தால் அவர்களுக்கு ஏற்ப சடங்கில் மாற்றங்கள் இருந்து வருகின்றன.

குழந்தைகள் இறந்தால் அவர்களுக்குச் செய்யும் சடங்குகள் வேறு விதமாக இருக்கின்றன. திருமணம் முடியாத ஆண் இறந்தால் அவர்களுக்கு எனத் தனியாக சடங்கு செய்கின்ற வழக்கம் இருந்து வருகிறது எனபதனைச் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கிராமங்களினைக் கள ஆய்வு செய்த போது கிடைத்தவையாகும்.

காலம் என்பது எவ்வளவுதான் வளர்ச்சி அடைந்து இருந்தாலும் பண்டைக்காலத்தில் இருந்த சடங்கு முறைகள் இன்றும் பின்பற்றி வரப்படுகிறது. கணவை இழந்த பெண்ணிற்குச் செய்கின்ற குங்குமம் கலைதல், வெள்ளைச் சீலை அணிவித்தல் முதலான சடங்குகள் இருந்து வருகின்றன. அவர்களின் கூந்தலை நீக்கி மொட்டை அடித்தல் வழக்கத்தினைப் பின்பற்றுவதில்லை. இது காலப்போக்கில் மறைந்து போன பண்பாட்டு வழக்கமாகும்.

இறப்பின் பொழுது செய்யப்படுகின்ற சடங்குகள் அனைத்தும் புலையன் எனப்படும் வண்ணார் சமூகத்தினர் மூலமே செய்து வருகின்றனர். சங்க இலக்கியத்திலும் இச்சமூகத்தவரே செய்து வந்துள்ளனர். தற்காலத்திலும் வண்ணார் சமூகத்துடன் மருத்துவர் சமூகத்தினரும் இணைந்தே இறுதிச் சடங்கினைச் செய்து வருகின்றனர். காலங்கள் மாற்றம் பெற்றாலும் பண்பாடு சார்ந்த சடங்கு முறைகள் இன்றும் இருந்து வருவதனை இறுதிச் சடங்கின் பொழுது மேற்கொண்ட கள ஆய்வின் வழி அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் உள்ள சடங்கு முறைகள் சிவகங்கை மாவட்ட மக்களிடம் இருந்து வருகின்றன. சங்க கால மக்களிடம் இருந்த சடங்குகளின் வழக்கம் தற்காலத்தில் சிறிய வேறுபாட்டுடன் இன்றும் இருக்கின்றது. காலங்கள் பல மாற்றம் பெற்று இருப்பது போல சடங்குகளும் சிறு சிறு மாற்றங்களுடன் சிவகங்கை மக்களிடம் இருந்து வருவதனைக் கள ஆய்வின் வழி அறிய முடிகிறது. ஒரு சில சடங்குகளில் மாற்றம் இருந்தாலும் அதன் உட் கூறுகள் அல்லது படையல்

பொருள்கள் வழி பண்டைக் காலத்தில் இருந்த சடங்கின் வகைகளில் ஒன்று என்பதனை அறிய முடிகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் இப்பேராய்வு நடந்து வரும் காலகட்டத்தில்தான் இம்மாவட்டக் கீழடியில் தொல்லியல் ஆய்வுகளும் நடைபெற்று வருகிறது. ஆகையினால் பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை அறிய ஆவல் பெற்றுள்ளனர். பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் கூறுகள் என்பது சங்க கால இலக்கியத் தரவுகளைக் கொண்டு தற்காலத்தில் சிறிய வேறுபாட்டுடன் இன்றும் மக்களிடம் இருந்த சடங்குகளின் வழக்கம் என கள ஆய்வு மற்றும் இலக்கியப் பதிவுகள் இன்னும் பிற வழியாகவும் உணர்த்தப்பட்டு வருகின்றது. இம்முயற்சியால் கற்றறிந்த பெருமக்கள் மட்டுமல்லாது பிற பண்பாட்டுத் தமிழர்களுக்கும் தான் செய்யும் சடங்கு முறைகள் சங்க காலத் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளின் சங்கிலித் தொடரின் எச்சம் என்பதை உணரமுடிந்தது. பேராய்வுத் திட்டத்தின் இவ்வுணர்த்தல் பரவலாக்கம் பெறும்.

## No.of Publications Out of the Project

**பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு (UGC) பேராய்வுத் திட்டத்திற்கான தேசிய - பன்னாட்டுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு வாசித்தளித்து அச்சாக்கம் பெற்ற கட்டுரைகளின் விபரம்:**

1. தலைப்பு: மானுடம் வென்றெடுக்கும் சடங்குகள்

   சங்க காலத் தமிழரின் சடங்குகள் –

   பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை. 2018, தொகுதி – 2

   ISBN. 978-93-87102-46-0, Shanlax Publications, Madurai

2. பொதுத்தலைப்பு: Environment in Sangam Literature,

   தேசிய கருத்தரங்கம், பல்கலைக்கழக மானிய நிதிநல்கைக் குழு மற்றும்,

   திருவனந்தபுரம் பல்கலைக்கழக கல்லூரி, தமிழ்த்துறை,

பாளையம், திருவனந்தபுரம்.

பொறுப்பு: அமர்வு தலைவர் மற்றும் கட்டுரையாளர்,

தலைப்பு: இயற்கைப் பின்னணியில் குறுந்தொகை தலைமக்கள்

3. சங்க காலத் தமிழரின் சடங்குகள் –

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை. 2018, தொகுதி – 1

ISBN. 978-93-87102-46-0, Shanlax Publications, Madurai.

4. சங்க காலத் தமிழரின் சடங்குகள் –

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை. 2018, தொகுதி – 2

ISBN. 978-93-87102-46-0, Shanlax Publications, Madurai.

**வெளிநாட்டு பத்திரிக்கை பதிப்புக் கட்டுரைகள்**

**(Foreign News Papers Publications)**

**31/12/2017**

தலைப்பு: மானுடம் வென்றெடுக்கும் சடங்குகள் – **I,**

தமிழ் மலர், மலேசியா.

Tamil MalarDaily Published by Malasiya News Paper.

(TAMIL MALAR DAILY KDN PP17995/02/2013(033542))

**07/01/2018**

தலைப்பு: மானுடம் வென்றெடுக்கும் சடங்குகள் – **II,**

தமிழ் மலர், மலேசியா.

Tamil MalarDaily Published by Malasiya News Paper.

(TAMIL MALAR DAILY KDN PP17995/02/2013(033542))

**28/01/2018**

தலைப்பு: மானுடம் வென்றெடுக்கும் சடங்குகள் – III,

தமிழ் மலர், மலேசியா.

Tamil MalarDaily Published by Malasiya News Paper.

(TAMIL MALAR DAILY KDN PP17995/02/2013(033542))

**18/02/2018**

தலைப்பு: மானுடம் வென்றெடுக்கும் சடங்குகள் – IV,

தமிழ் மலர், மலேசியா.

Tamil MalarDaily Published by Malasiya News Paper.

(TAMIL MALAR DAILY KDN PP17995/02/2013(033542))

**25/02/2018**

தலைப்பு: மானுடம் வென்றெடுக்கும் சடங்குகள் – V,

தமிழ் மலர், மலேசியா.

Tamil MalarDaily Published by Malasiya News Paper.

(TAMIL MALAR DAILY KDN PP17995/02/2013(033542))